DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 121/2020

List of Witness : Lw10

Prosecution Witness : PW8

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | துரைச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பிரபாகரன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 06/11/2025

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பழையகோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2018 ஆம் வருடம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. நவாலூத்தில் உள்ள கே. பழனிச்சாமி தோட்டத்தில் முதல் நாள் ஏற்பட்ட கிணறு துார்வாறும்போது ஏற்பட்ட விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை செய்து படம் வரைந்தார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். பார்வை மகசர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் போலீசார் என்ன எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்பு நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் சரிதான். அங்கு வைத்து தான் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து வாங்கும்போது தான் மற்றொரு சாட்சியான காளிமுத்துவிடம் அங்கு வைத்து தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். இந்த சம்பவத்தில் காயம்பட்டவர்கள் எல்லாம் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம்

செய்து விட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2025.11.06 17:59:26 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 06/11/2025